To website
[handwritten initials] 12/9/22

அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
கோவை -641 014.

**குறிப்பாணை எண் : 1541 /இ1/2021/நாள் :05.09.2022**

பொருள் : அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, கோவை - கல்வி உதவித்தொகை 2022-2023 ஆம் கல்வியாண்டு பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட /சீர் மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவது - தொடர்பாக.

**********

இப்பயிலகத்தில் நடப்புக் கல்வியாண்டில் (2022-2023) முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு கல்வி பயிலும் - பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட /சீர் மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு மேற்கண்ட ஆண்டிற்கான கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான புதியது மற்றும் புதுபித்தல் விண்ணப்பங்களை **www.gptccbe.co.in** என்ற கல்லூரி இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொண்டு அதனைப் விடுதல்கள் ஏதுமின்றி பூர்த்தி செய்து வரும் 30.09.2022-ம் நாளுக்குள் தவறாமல் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

மேலும், மேற்கண்ட விண்ணப்பத்துடன் மாணவ/மாணவியர்கள் பெயரில் ஏதாவதொரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கணக்குத் துவங்கி அதற்கான கணக்கு எண் **IFSC** எண் மற்றும் **MICR** எண் போன்றவைகளுடன் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருப்பின் அதற்கான சான்றுடன் இணைத்து மேற்கண்ட நாளுக்குள் அலுவலகத்தில் சமர்ப்பிக்க அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட நாளுக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பத்துடன் மாணவியர்/ மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1). முதல் பட்டதாரியாக இருந்தால் அதற்கான சான்று (வட்டாட்சியர்)
2) வங்கி கணக்கு புத்தகம் (நகல் நாளது தேதியில் உள்ளபடி)
3) வருமான சான்று அசல் (Income certificate)
4) ஆதார் அட்டை நகல்
5) வருகை சான்று அசல்
6) இதற்கு முன்னர் பயின்ற பள்ளி மதிப்பெண்சான்று (நகல்)

(ஒம்) பூ.தேன்மொழி,
முதல்வர்

[signature] 5/9/22
முதல்வருக்காக
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி
கோவை-641 014.

பெறுநர்

அனைத்துத் துறைத் தலைவர்கள்
தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது- [initials] 5/9/22
(தங்கள் துறை மாணவ/மாணவியர்கள் மேற்கண்ட நாளுக்குள் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து அலுவலகத்திற்கு அனுப்பி பயன் பெற ஏதுவாக மாணவர்களுக்கு அறிவுறுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.)

நகல் : அறிவிப்புப் பலகை (கல்லூரி பிரதான கட்டிடம் மற்றும் விடுதி)
" இணையதளம்

85/1 D.B.C.1—1,92,780 Cps.—2022-G.B.P., Port.

# தமிழ்நாடு அரசு

## பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை.

கல்வி உதவித் தொகை விண்ணப்பம்

புதியது.
சொந்த மாவட்டம்:
படிப்பு:
பதிவெண்:
கல்வியாண்டு:

(மேல்நிலைப் பள்ளி மற்றும் அதற்கு மேற்பட்ட படிப்பு)

### பிரிவு–"அ"

| | | |
|---|---|---|
| 1. | மாணவரின் பெயர் | : |
| 2. | தந்தை / பாதுகாவலர் பெயர் | : |
| 3. | பிறந்த தேதி (நாள்:மாதம்:வருடம்) | : |
| 4. | வயது | : |
| 5. | பாலினம் | : ஆண்/பெண்/மூன்றாம் பாலினத்தவர். |
| 6. | மதம் | : |
| 7. | பிரிவு | : பி.வ./மி.பி.வ./சீ.ம. |
| 8. | சாதி (சாதி சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்). | : |
| 9. | குடும்பத்தில் முதல் தலைமுறை பட்டதாரியா? (ஆம் என்றால் முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்). | : ஆம்/இல்லை |
| 10. | பெற்றோரின் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்). | : ரூ. |
| 11. | ஆதார் எண் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | : எண். |
| 12. | மின்னஞ்சல் முகவரி | : |
| 13. | கைப்பேசி எண் | : |
| 14. | மாணவரின் வங்கி கணக்கு விவரம் (வங்கி கணக்கு புத்தகம் நகல் இணைக்கப்பட வேண்டும்). | : |
| | அ. வங்கி கணக்கு எண் | : |
| | ஆ. வங்கியின் பெயர் | : |
| | இ. வங்கி கிளையின் பெயர் | : |
| | ஈ. IFSC Code | : |
| | உ. MICR Code | : |

15. மாணவரின் வீட்டு முகவரி விவரம்

அ. தற்காலிக வீட்டு முகவரி :

ஆ. நிரந்தர வீட்டு முகவரி :

16. தற்போது பயிலும் கல்வி நிலையத்தின் பெயரும், முகவரியும். :

17. கடந்த ஆண்டில் படித்த வகுப்பு :

18. Lateral Entry : ஆம் / இல்லை

19. கலந்தாய்வு எண் (Counselling No) (தொழிற் படிப்புகளுக்கு மட்டும்) (நகல் இணைக்கப்பட வேண்டும்) :

20. நடப்பு ஆண்டில் படிக்கும் வகுப்பு மற்றும் படிப்பின் கால அளவு. :

(அ) சென்ற ஆண்டில் வருகைப் பதிவு விழுக்காடு சான்றுடன். :

21. கடந்த ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளாரா? :

பெற்ற சராசரி மதிப்பெண் (பட்டியலை இணைக்கவும்). :

(அ) கடந்த / நடப்பு ஆண்டில் உதவித் தொகை பெற்றாரா? ஆம் எனில் அதன் விவரம். :

22. படிப்புப் பிரிவு சம்பந்தப்பட்ட துறையின் ஏற்பினைப் பெற்றுள்ளதா? :

23. இதே படிப்பிற்கு இதர துறைகள் மூலம் உதவித் தொகை பெற்றுள்ளாரா? :

24. கல்வி நிலையத்திற்கும் விண்ணப்பதாரர் வசிக்கும் இடத்திற்கும் உள்ள தொலைவு. :

25. விடுதியில் தங்கி பயிலுபவரா? : ஆம் / இல்லை

26. விடுதியின் தன்மை : கட்டண விடுதி / இலவச விடுதி

27. விடுதியின் பெயர் :

28. கல்வி நிலையத்தில் மாணவர் சேர்ந்த நாள் :

29. விடுதியில் சேர்ந்த நாள் :

30. அரசின் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு, ஆதி திராவிடர் நலத் துறை ஏற்பினைப் பெற்ற விடுதியா? :

கல்வி நிலையத்துடன் இணைந்த விடுதியா? :

விடுதியை விட்டு நீங்கும் தோராயமான நாள் :

32. விடுதியில் வசூலிக்கப்படும் உண்டி, உறையுள் கட்டண விதம். :

மாணவர் / மாணவியர் கையொப்பம்.

மேற்படி மாணவர் / மாணவியரின் கல்வி உதவித்தொகை விண்ணப்பம் சரிபார்க்கப்பட்டது. விவரங்கள் யாவும் சரியானவை என உறுதி செய்யப்பட்டு இவர் கல்வி உதவித்தொகை பெற தகுதியுடையவர் என்பதால் இவ்விண்ணப்பம் ஏற்பு செய்யப்படுகிறது.

விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பம் __________ காலங்கடந்து வந்துள்ளது.

நாள்: கல்வி நிறுவனத் தலைவர் கையொப்பம்.

முத்திரை:

## மாணவர் அளிக்கவேண்டிய உறுதிமொழி.

எனக்கு பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையினரால் உதவித் தொகை வழங்கப்பட்டால் நான் அரசியலிலோ அல்லது எந்தவிதமான அழிவுப் பணிகளிலோ ஈடுபடமாட்டேன் என்றும், படிப்பிலேயே முழுக் கவனம் செலுத்துவேன் என்றும் உறுதி கூறுகிறேன். நான் அரசியலில் அல்லது அழிவு வகைகளில் ஈடுபட்டாலும், படிப்பில் மன நிறைவான முன்னேற்றம் காட்டவில்லை என்றாலும் எனக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகைகளை உடனே திரும்ப செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்படுகிறேன்.

இடம் :

**மாணவர் / மாணவியரின் கையொப்பம்.**

நாள் :

### பெற்றோர் அல்லது பெற்றோர்களின் பாதுகாப்பில் இல்லாமலிருந்தால் பாதுகாவலர் அளிக்க வேண்டிய உறுதிமொழி.

வருமான - சாதிச் சான்றிதழில் அளிக்கப்பட்ட விவரங்கள் சரியானவை என்றும், உண்மையானவை என்றும் உறுதி கூறுகிறேன். மேலும், அளிக்கப்பட்ட விவரங்கள் சரியானவை அல்ல என்று கண்டுபிடிக்கப்பட்டால் கொடுக்கப்படும் உதவித் தொகையை 1864 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் தண்டல் சட்டத்தின் (தமிழ்நாடு 1864 ஆம் ஆண்டு 2 வது சட்டம்) 52 ஆவது பிரிவின்படி நிலவரியைப் போன்றோ அல்லது அவ்வப்போது ஏற்படுத்தப்படும் விதிகளின்படியோ என்னிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம் என்ற நிபந்தனைக்கு உட்படுகிறேன்.

தவிர, உதவித் தொகை ஏதேனும் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறுதலாகக் கொடுக்கப்பட்டிருந்தாலோ அப்படிக் கூடுதலாக அல்லது தவறுதலாகக் கொடுக்கப்பட்ட தொகையை மேற்கண்ட சட்டத்தின்கீழ் நிலவரித் தண்டல் செய்யப்படுவதைப் போலவே என்னிடமிருந்து தண்டல் செய்து கொள்ளலாம் என்ற நிபந்தனைக்கும் நான் உட்படுகிறேன். உதவித் தொகையாக அரசு கொடுக்கும் தொகைக்கும் கூடுதலாகும் படிப்பு மற்றும் உண்டி, உறையுள் செலவுகள் முதலியவற்றை நானே என் பணத்திலிருந்து மேற்கொள்கிறேன்.

உதவித் தொகையைப் பெறும் நோக்கத்துடன் தெரிந்தே உண்மையான வருமானத்தை மறைத்துச் சான்றிதழ் பெற்றிருப்பதாகப் பிறகு விசாரணையின்போது தெரிய வந்தால் (I.P.C.) கு.த.வி.தொ. பிரிவு 420-ன்படியோ மற்றும் அதனைச் சார்ந்த இதர சட்ட விதிகளின்படியோ என்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்ற நிபந்தனைக்கும் உட்படுகிறேன்.

மாணவரின் கையொப்பம்.

பெற்றோர் அல்லது பெற்றோர்
இல்லையென்றால் பாதுகாவலரின் கையொப்பம்.

இடம்:

நாள்:

## முக்கியக் குறிப்புகள்.

உதவித் தொகை விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்யும் முன் மாணவ / மாணவியர் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியக் குறிப்புகள்.

### அனுப்பவேண்டிய கடைசி நாள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பள்ளிப் படிப்புக்கு மேற்பட்ட படிப்பு ஜூன் திங்களில் திறக்கப்பட்டால் | : | ஆகஸ்ட் 15 ஆம் நாள். |
| 2. | பட்ட மேற்படிப்பு, தொழிற்பயிற்சி கல்லூரிகள் ஜூலைத் திங்களில் திறக்கப்பட்டால் | : | ஆகஸ்ட் 31 ஆம் நாள். |
| 3. | பட்ட மேற்படிப்பு, மருத்துவம், ஏனைய தொழில், பொறியியல் கல்லூரிகள். | : | செப்டம்பர் 30 ஆம் நாள். |

1. பாலிடெக்னிக் / தொழிற்கல்விபடிப்புகளில் மனுதாரர் குடும்பத்தில் முதல் பட்டதாரியாகவும் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குள்ளாகவும் இருக்கும் பட்சத்தில் இலவச கல்வி திட்டத்தின் கீழ் உதவித்தொகை ஒப்பளிக்கப்படுகிறது. இதில் முதல் பட்டதாரி நிபந்தனையை பூர்த்தி செய்யாத பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு பள்ளி மேற்படிப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டண வீதத்தில் ஒப்பளிக்கப்படுகிறது. எனவே, கல்வி நிறுவனங்களுக்கு இவ்விவரத்தினை மீண்டும் வலியுறுத்தி உதவித்தொகை கோரி மனு செய்துள்ள மாணவர்களின் சான்றுகளை பரிசீலித்து உரிய திட்டத்தில் (Post matric/Free education) உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2. சுயநிதி தொழிற்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் **புதியதிற்கான** கல்வி உதவித்தொகை கோரும் கேட்புகளுடன் சம்பந்தப்பட்ட மாணவர் அரசு ஒதுக்கீட்டின் கீழ் இடம் பெற்றதற்கான (Copy of Counseling Order) **ஆணையின் நகல் கண்டிப்பாக பெறப்பட வேண்டும்.**

3. அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் மூன்றாண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகளுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி இலவச கல்வி திட்டம் செயற்படுத்தப்பட்டாலும் புத்தக கட்டணம், உண்டி உறைவிடக் கட்டணம் ஆகியவை ரூ.2.50 இலட்சத்திற்குள் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே ஒப்பளிக்கப்படுகிறது.

4. அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் மூன்றாண்டு இளங்கலை மற்றும் அறிவியல் பட்டபடிப்புகளுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி (வருமான வரம்பு இன்றி) இலவச கல்வித்திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்பதால் மூன்றாண்டு பட்டப்படிப்பு பயிலும் அனைத்து பி.வ/மி.பி.வ/சீ.ம. மாணவ /மாணவிகளுக்கும் கல்வி உதவித் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.